
வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்









கழக வெளியீடு

வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்

★

ஆசிரியர் :

பேராசிரியர் மா பா குருசாமி, எம் ஏ, டி ஜி டி,

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
79, பிரகாசம் சாலை, சென்னை-600 001.
1981

1981 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
ரும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௧௭௨௨

முதற் பதிப்பு : நவம்பர் 1981

w1, N3
N81

VAZHVANGU VAZHNTHAVARGAL

14—11—'81 அன்று
காரைக்குடியில் நடைபெற்ற
குழந்தைகள் நாள் விழாவில் வெளியிடப்பெற்றது.

திருவரங்கனார் அச்சகம், சென்னை-600 018. (1/1)

பதிப்புரை

இவ்வுலகில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்தனர்—வாழ்கின்றனர். இவ்வுலகை விட்டு மறைந்தோரை எண்ணினால் அஃது அளவில் அடங்கா. எனினும், மக்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் பெருமக்கள் மிகச் சிலரேயாவர். பிறப்பு-இறப்பு இவ்விரண்டுக்குமிடையே சிறப்பு என்னும் ஒன்றினைப் பெருமளவுக்கு வாழ்வாங்கு வாழ்ந்த அத்தகைய பெருமக்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு சிலவற்றை இச் சிறு வெளியீட்டின் கண் எடுத்து வெளியிட்டுள்ளோம்.

"வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்" என்ற தலைப்பில் பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்கள் அவ்வப்போது இதழ்களில் எழுதி வந்த வரலாறுகளே இவை. இவற்றைச் செப்பம் செய்து கொடுத்தவர் கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரனவர்களாவர். அவர்கட்கும் இந்நூலாசிரியர்க்கும் கழகத்தின் நன்றி என்றும் உரியது.

இந்நூல் நூலகங்கள் தோறும் இருந்து பள்ளிச்சிறார்க்குப் பயன்படவேண்டும் என்பது எமது பேராவல். அதுமட்டுமன்று; இஃதொரு குழந்தை இலக்கியமாகவும் திகழும் பெற்றி வாய்ந்தது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்

1. வாழ்ந்து சிறந்த வ. உ. சி.



உலகில் கோடிக்கணக்கான மக்கள் தோன்றுகின்றனர்; மறைகின்றனர். அவர்களைப்பற்றியெல்லாம் நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. ஏனென்றால், அவர்கள் தம் குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள் வாழ்ந்து மறைந்தவர்கள்.

ஆனால், சிலர் தங்களுக்காக வாழாமல் நாட்டுக்காக வாழ்ந்தனர்-வாழ்கின்றனர். அவர்களை நாம் மறப்பதில்லை. அப்படி நினைக்கத் தக்கவர்களுள் ஒருவர் வ. உ. **சிதம்பரம் பிள்ளை**. ''கப்பலோட்டிய தமிழன்'' என்று போற்றப்பெறும் அவர் நடத்தியது தித்திக்கும் திருவாழ்வு ஆகும்.

வ. உ. சி. வழக்கறிஞராகத் தம் வாழ்வைத் தொடங்கினார். சிறந்த நாட்டுத்தொண்டராக வாழ்ந்தார். நல்ல சமுதாயத் தொண்டராகத் திகழ்ந்தார்.

அவர் பிறந்தது 1872ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள். ஊர், மகாகவி பாரதியார் பிறந்த எட்டயபுரத்தை அடுத்த ஒட்டப்பிடாரம். படித்துத் தகுதி பெற்று 1900இல் தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார்.

இல்லறம் நல்லறமாக நடக்க, ஏற்ற துணைவியாக வள்ளியம்மை என்பவரைக் கைப்பிடித்தார். அவர் நீண்ட காலம் வாழாததால், அவர் பிறந்த குடும்பத்திலிருந்தே மீனாட்சி என்பவரை மீண்டும் மணந்தார்.

வ. உ. சி ஒரு சீர்திருத்தச் செம்மல். தீண்டாமைப் பேய்க்குக் குழிதோண்டியவர்களில் முன்னோடி அவர். அந்தக் காலத்திலேயே, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கண்ணில்லாத துறவி ஒருவரைத் தமது வீட்டில் வைத்துப் பாதுகாத்தார். அவருக்குத் தம் மனைவியே உணவளித்து, வேண்டிய உதவிகள் செய்துவரச் செய்தார் என்றால், அவரது விரிந்த மனத்தை எப்படிச் சொல்லுக்குள் அடக்க முடியும்!

அவரிடமிருந்த நாட்டுப்பற்று மிக உயர்ந்தது. உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியில் ஊக்கம் கொண்டார். அவர் வாய்ச்சொல் வீரர் அல்லர். செயல்வீரர்; நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் வைத்தார். அயலார் ஆதிக்கத்தை எதிர்த்துக் கப்பல் கம்பெனி தொடங்கினார்.

வ. உ. சி. சிறந்த நாவன்மை பெற்றவர்; ஆழ்ந்த தமிழறிவு கொண்டவர். எளியவர்க்கு வாரி வழங்கும் கொடை மனம் பெற்றவர்.,

நாட்டுப்பற்றுக்குப் பரிசாகச் சிறைவாழ்க்கை கிடைத்தது. சிறையில் செக்கிழுத்தார்; எனினும் சோர்ந்து விடவில்லை.

1936ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் நாள் வ. உ. சி. மறைந்தார். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், நாட்டுப்பற்று - ஆகியவை அவர் வாழ்க்கை நமக்குத் தரும் பாடங்கள் ஆகும்.

உ. தொழிலாளர் தொண்டர்



மாணவர் ஒருவருக்குப் பெரிய சிக்கல் ஒன்று எழுந்தது. அந்த மாணவர் அன்று பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு எழுத வேண்டும். ஆனால் அதே நாளில் அவருடைய ஆசிரியர்மீது ஒரு வழக்கு. அதில் அந்த மாணவர் சான்று கூற வேண்டும். மாணவரின் சான்று ஒன்றுதான் ஆசிரியருக்குத் துணைபுரிய வல்லது. அதுதான் உண்மையானதும் கூட. ஒரு பக்கம் ஆசிரியரின் விடுதலை; மறுபக்கம் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குத் துணையாக இருக்கும் தேர்வு. வீட்டிலுள்ள பெரியவர்கள் மாணவரைத் தமது விருப்பப்படி முடிவு செய்யுமாறு கூறினர். மாணவர் நீண்ட சிந்தனைக்குப் பிறகு வாய்மை வெல்ல வேண்டும் என்ற நோக்கில் ஆசிரியருக்காகச் சான்றுகூறச் செல்வதென்ற முடிவுக்கு வந்து அப்படியே செய்தார்.

இந்தப் பெருமைக்குரிய செயலைச் செய்தவர் "தமிழ்த் தென்றல்" என்றும் "தொழிலாளர் தொண்டர்", என்றும் போற்றப்பெறும் திரு. வி. கலியாணசுந்தரனாராவார்.

1883 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26ஆம் நாள் சென்னைக்கருகிலுள்ள துள்ளம் என்னும் ஊரில் திரு. வி. க. பிறந்தார். பள்ளிக் கல்வி சென்னையில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையிடம் தமிழ் கற்றார். அவருக்காகத் தாம் தேர்வும் எழுதாமல் சான்று கூறினார்.

தந்தையாரின் மறைவுக்குப் பிறகு குடும்பப் பொறுப்பு இவர்மேல் விழுந்தது. 1906 ஆம் ஆண்டில் ஸ்பென்சர் கம்பெனியில் கணக்கராகப் பணியாற்றத் தொடங்கினார். அங்கிருந்து கொண்டே மிகுதியான தமிழ்நூல்களைக் கற்றார். அடுத்த ஆண்டிலேயே கணக்கர் வேலையை விட்டுவிட்டு ஒரு பள்ளியில் தமிழாசிரியரானார். 1917 இல் ஆசிரியர் பணியையும் விட்டுவிட்டுத் "தேச பக்தன்" என்ற இதழைத் தொடங்கி நடத்தினார்.

அவரது தமிழ்த் தொண்டு சிறந்தது. பல அரிய நூல்களை எழுதினார். அவரது "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்னும் நூல் மிகவும் சிறந்தது. அண்ணலின் வாழ்வுக்கு அற்புதமான விளக்கம் அந்நூல். அவரது சமயத் தொண்டும் குறிப்பிடத்தக்கது.

ஆசியாவிலேயே முதன்முதலாகத் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்வித்த பெருமை அவரையே சாரும். எண்ணற்ற இளைஞர்களின் உள்ளங்களில் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஊன்றி வளர்க்க அவருடைய கவிதைகளும் உரைநடை நூல்களும், சொற்பொழிவுகளும் பெரிதும் பயன்பெற்றன. தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் தூய்மையாக வாழ்ந்த திரு. வி. க. 17-9-'53 இல் தமது 71 ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

திரு. வி. க. வின் பேச்சு நடைக்கும் எழுத்து நடைக்கும் வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்றே. அந்நடையில் ஈடுபட்டு இன்புற்றவர்களே அவரைத் 'தமிழ்த் தென்றல்' என்று சிறப்பித்தனர். தமிழ்த் தென்றல் என்றால் 'திரு. வி. க.' - எனின் அவர் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

3. வியப்பிற்குரிய ஐயர்



இலண்டனில் சட்டம் படித்துக் கொண்டிருந்தார் இந்திய இளைஞர் ஒருவர். அவரைத் தாய்நாட்டின் விடுதலை இயக்கம் மிகவும் கவர்ந்தது. படைக்கருவி ஏந்திப் போராடித் தாய் நாட்டின் அடிமை விலங்கொடிக்க இடியெனக் குமுறிக் கிளம்பிய வீர சவர்க்காரின் தொடர்பும் அவருக்குக் கிடைத்தது. இந்த நிலையில் இந்தியாவில் ஜாக்ஸன் சுடப்பட்டார். அதன் தொடர்பாகச் சட்டம் படித்துக் கொண்டிருந்த இந்த இந்திய இளைஞரைப் பயங்கரப் புரட்சிக்காரராகக் கருதிய இங்கிலாந்து அரசு கைது செய்ய முயன்றது. ஆனால், இந்த இந்திய இளைஞர் ஆங்கிலக் காவற் படையினரின் வலையில் சிக்கவில்லை. மாறுவேடங்கள் பல போட்டு இங்கிலாந்திலிருந்து பாரிசுக்குச் சென்று, பின் ரோம்-கெய்ரோ-மெக்கா வழியாகப் புதுச்சேரி வந்து சேர்ந்தார். இவருடைய ஆற்றல் மிக்க வீரச் செயல்கள் ஆங்கிலேயர்களை வியப்பில் ஆழ்த்தின; இந்தியர்கள் இவரைப் போற்றி மகிழ்ந்தனர்.

இத்தகைய வியப்பிற்குரிய இந்தியராகச் சிறப்புப் பெற்றவர் வ. வே. சு. ஐயர் என்று அன்போடு அழைக்கப் பெறும் வரகநேரி வேங்கட சுப்பிரமணிய ஐயர் ஆவர். இவர் 1881 ஆம் ஆண்டில் தமிழகத்தில் காவிரியாற்றினால் செழித்து நிற்கும் திருச்சி மாவட்டத்திலுள்ள வரகநேரியில் பிறந்தார்.

இவர்தம் தந்தையார் வேங்கடேச ஐயர். அவர் கல்வித் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

வ. வே. சு. ஐயர் இளமையிலேயே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்ருர். இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பட்டம் பெற்று வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் மேற் படிப்பிற்காக இங்கிலாந்து சென்ருர். அங்குத்தான் இவரது தேசியத் தொண்டு தொடங்கியது.

தமிழர்கள் வீரத்தில் சிறந்து விளங்க வேண்டுமென் னும் நோக்கத்தோடு சேரன்மாதேவியில் ஒரு குருகுலத்தைத் தொடங்கினர். அங்கு எல்லாப் பாடங்களையும் அந்தக் காலத் திலேயே தமிழில் கற்பித்தார்.

இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததும் கம்பராமாயணத்திற்கு ஆங்கிலத்தில் ஆய்வுரை எழுதியதும் தமிழுக்குச் செய்த சீரிய தொண்டுகளாகும்.

இவருடைய குறிக்கோள் நிறைவேறும் முன்பே 1925 ஆம் ஆண்டில் இவரை ஒரு பேரிடர் விழுங்கியது. பாபநாசம் அகத்தியர் அருவியில் மாணவர்களோடு குளிக்கச் சென்ருர். இவர்தம் மகளாரும் உடன் சென்ருர். குளித்த வேளையில், கால் தவறி விழுந்த மகளாரைக் காப்பாற்றும் ஆர்வத்தில் விரைந்து தாவினர். அம் முயற்சியால் மகளா ரைக் காக்கமுடியாது போய் விட்டதுடன், தம்மைக் காத்துக் கொள்ளவும் முடியாது போய்விட்டது! இவ ருடைய மொழித்தொண்டும் நாட்டுப்பற்றும் நமக்கு வழி காட்டக் கூடியவை.

———

4. இரட்டையரில் ஒருவர்



"அரசியலே எனது வாழ்க்கை; விடுதலைதான் எனது வீடுபேறு," என்று நாட்டுப்பற்ருேடு, நாட்டுக்காகவே வாழ்ந்து உயிர் துறந்தார் ஒருவர். அவர் நெஞ்சம் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டது. ஆனால், தாம் வணங்கும் கடவுளாகப் பாரதமாதாவையே கொண்டார். தமது இறுதிக் காலத்தில்கூட "பாரத மாதா கோயில்" என்னும் ஒன்றைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவரைத் தூத்துக்குடி மக்கள் தாம்கண்ட "இரட்டையரில்" ஒருவ ராகவே மதித்தனர். அவர்தாம் சுதந்திரக்கனலாக வெடித்தெழுந்த சுப்பிரமணிய சிவா. மற்றவர் 'கப்பலோட்டிய தமிழரான' வ. உ. சி.

சுப்பிரமணிய சிவா 1884 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 14ஆம் நாள் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டில் ராஜமையர் என்பவருக்கும் நாகம்மாள் என்ற அம்மையாருக்கும் பிள்ளையாகப் பிறந்தார்.

தமது பதினாரும் வயது வரை பள்ளியில் படித்தார். படித்த காலத்திலேயே மற்போர், சிலம்பம் போன்றவைகளையும் கற்ருர். பின்னர் அவர் பலர் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மீசை வைத்துக் கொண்டு, சீர்திருத்தவாதியாகக் கிளர்ந்தார். இளைஞர் பலரைச் சேர்த்துக்கொண்டு நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் குதித்தார்.

"என் தெய்வம் பாரதமாதா. என் வேலை நாட்டுத் தொண்டு. என் சாதி பாரத சாதி," என்று கூறிக் கொண்டு, ஊர்ஊராக மனைவியுடன் சென்று நாட்டு மக்களிடையே விடுதலைவேட்கையை ஊட்டினார்.

வ. உ. சி. யோடு சேர்ந்துகொண்டு விடுதலைப்போரில் ஈடுபட்டார். சிவா உணர்ச்சிமிக்க பேச்சாளர்! ஆற்றல்மிக்க எழுத்தாளர்! அயராத தொண்டர்! சிவா செய்தித்தாள் நடத்தினார். எழுச்சியோடு எழுதினார். அதனால் அரசினர் இவர் மீது நாட்டுப் பகைமைக் குற்றம் சாட்டிச் சிறையிலிட்டனர்.

சிவா சிறையில் பட்டபாடுகள் அளவிடுதற்கு அரியன; வளமும் வலுவுமிக்க சிவாவின் உடல் சிறைக் கொடுமையால் வாடி வதைந்தது. அம்மட்டோ! நாட்டுக்கு உழைத்த அந் நன்மகனார்க்கு அந்நாளைய அயலரசு பெருநோயைப் பரிசாக வழங்கியது. எனினும் சோர்வின்றித் தம் இறுதிவரையில் தாய்நாட்டுத் தொண்டாற்றினார்.

வீரர் சிவா 23-7-25 இல் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

"திலகர் என்றால் சுதந்திரம்" என்று கூறுவார் சிவா. "சிவா என்றால் பாரதம்" என்று நாம் கூறலாம். அந்த உணர்வுதான் இந்நாள் தேவை.

———

5. அறிவால் உயர்ந்த அம்பேத்கார்



எக்குடியில் பிறந்தாலும் அறிவாற்றலும், ஒப்பற்ற உழைப்புத்திறனும், பிறர்நலம் பேணும் பெருந்தன்மையும் பெற்றிருந்தால், ஒருவர் என்றும் அழியாத புகழ் பெற்று விளங்க முடியுமென்பதற்கோர் எடுத்துக்காட்டாக இலங்கியவர் டாக்டர் அம்பேத்கார்.

மராட்டிய மாநிலத்திலுள்ள அம்பாவதி என்னும் கிராமத்தில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் அம்பேத்கார் பிறந்தார். இவருடைய பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் பீமாராவ். தந்தையின் பெயர் ராம்ஜி சக்பால். பெற்ற அன்னையார் பீமபாய். இவர் பிறந்த இனம் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டதாகக் கருதப்பெற்ற ஓர் இனம். இவருடைய தந்தை இராணுவத்தில் பணியாற்றி வந்தார்.

அம்பேத்காரின் பள்ளிக்கல்வி சதாராவிலும், பம்பாயிலும் நடைபெற்றது. 1907 ஆம் ஆண்டு பள்ளியிறுதித் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்றார். இதனால் இவருடைய கல்லூரிக் கல்விக்குப் பரோடா மன்னரின் உதவி கிடைத்தது. 1912 ஆம் ஆண்டில் பி. ஏ., பட்டம் பெற்ற அம்பேத்கார் பரோடா அரசாங்கத்தில் சிறிது காலம் பணியாற்றினார். பின் மேற்படிப்பிற்காக அமெரிக்காவுக்குச் சென்று திரும்பினார்.

அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் இருந்த போதிலும் தம்மை மேற்குலத்தினரென்று சொல்லிக் கொண்டவர்கள் இவரை நடத்திய முறை மற்றை எளிய தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி இவர் எண்ணிப்பார்க்குமாறு செய்தது. சமுதாயத்தின் கீழ்த்தட்டில் சாதியின் பெயரால் ஒதுக்கப் பட்டு இழிவுபடுத்தப் பெறுகின்ற மக்களின் மேம்பாட்டிற் காக அல்லும் பகலும் அயராது உழைத்தார். அதே பொழுதில் தமது அறிவின் திறனை நாட்டின் நலனுக்காக வும் செலவிட்டார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில் அம்பேத்கார் கலந்துகொண்டார். நம் நாட்டுச் சிக்கல்களை மேல்நாட்டினரும் உணரச் செய்தார். காந்தியடிகள், நேரு ஆகியவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை களுள் ஒருவராகத் திகழ்ந்த அம்பேத்கார் விடுதலை பெற்ற இந்தியாவின் சட்ட அமைச்சராகவும் தொண்டு செய்தார். பம்பாயில் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு கல்லூரி அமைத்தார்.

ஏழை எளியவர்களின் தோழராகவும், சமுதாயத்தின் கீழ்நிலையில் உள்ளவர்களின் தலைவராகவும் அயராது பணி புரிந்த அம்பேத்கார் 5-12-55 இல் இயற்கை எய்தினார்.

இந்திய அரசியல் சட்டம் அம்பேத்காரின் நினைவுச் சின்னம்! அதனினும் உயிர்ப்புடைய நினைவுச் சின்னம் ஒடுக்கப் பட்டவர்களும் ஒதுக்கப் பட்டவர்களும் அவரை நினைத்து அயராது பாடுபட்டு உயர்வு பெறுவதேயாம்!

———

6. வங்க வீரர் - சுபாஷ்



வீரத்தின் திரு உருவமாக மக்களின் மனத்தில் நீங்காத இடம் பெற்று வாழ்பவர் சுபாஷ் சந்திரபோஸ். இன்றும் கூடச் சிலரால் உயிரோடு இருப்பதாக நம்பப்படுகின்ற இந்த வங்க வீரரின் வாழ்க்கை தியாகம் நிறைந்ததாகும்.

சுபாஷ் சந்திரபோஸ் 1897ஆம் ஆண்டில் ஒரு செல்வரின் மகனாகப் பிறந்தார். இவருடைய தந்தையார் புகழ்பெற்ற வழக்கறிஞர். படிக்கின்ற காலத்திலேயே சுபாஷ் துடிப்பு மிக்கவராக விளங்கினார். கல்கத்தாவில் மாநிலக் கல்லூரியில் படித்தபொழுது கல்லூரி வேலைநிறுத்தத்தை இவர் நடத்தியதற்காகக் கல்லூரியிலிருந்து வெளியேற்றப் பெற்றார். பின் இரண்டாண்டு கழித்து வேறு கல்லூரியில் சேர்ந்து பி. ஏ., ஆனர்சில் முதல் மாணவராகத் தேறினார். பின்னர், இங்கிலாந்திற்குச் சென்று ஐ. சி. எஸ்., பட்டம் பெற்றார். ஆனால், ஆங்கிலேய அரசின் அடிமையாக அலுவல் பார்க்க இவர் விரும்பவில்லை. இதனால் மற்றவர்கள் அரிய பெரிய பட்டமென்று கருதிய ஐ. சி. எஸ். பட்டத்தை இவர் துறந்துவிட்டு நாட்டுத்தொண்டில் ஈடுபட்டார்.

நேதாஜி என்று மக்களால் போற்றப்பட்ட இவர் சி. ஆர். தாஸால் மிகவும் கவரப்பட்டார். தொண்டர் படையொன்றைத் திரட்டினார். போரிடுதல் மூலமாகத்தான் நாட்டு விடுதலையைப் பெற முடியுமென்று திட்டமாகக்

கருதினார். அதற்குத் தக்கவாறு பாரத இளைஞர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டார்.

இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்து நாட்டின் விடுதலைப் போராட்டங்களிலும் கலந்துகொண்டார். இவருடைய பொன்னான இளமைக்காலத்தின் பெரும்பகுதி சிறைச் சாலையிலேயே கழிந்தது.

அறப்போர் வழியில் சென்ற காந்தியடிகளோடு கருத்து வேறுபாடு கொண்டார் சுபாஷ். தமக்கென ஒரு தனி வழியை அமைத்துக் கொண்டார். அரசினால் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த போஸ் 1941 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம் நாள் தலைமறைவாகி விட்டார்.

ஜெர்மனியில் ஹிட்லரோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு இந்திய தேசிய இராணுவம் என்ற ஒன்றை அமைத்தார். ஆனால் 1949 ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதம் 18 ஆம் நாளில் பார்மோசாவிலிருந்து விமானத்தில் சென்ற அவர் விபத்துக்குள்ளாகி மறைந்தாரென்று கூறப்பெறுகின்றது.

போஸ் விடுதலைக்குக் கைக்கொண்ட வழிமுறையைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொள்பவர் உண்டு. ஆனால் அவருடைய நாட்டுப் பற்று மட்டும் எவராலும் குறைத்து மதிக்கத் தக்கதாகாது. பிறந்த நாட்டுக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒருங்கே தந்த வீரர் சுபாஷ்போஸ் உலகவரால் என்றும் மறக்கப்பெறார்.

———

7. மாமனிதர் திலகர்



பத்து வயதுச் சிறுவனொருவன் தன் தந்தைக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். பெரிய புலவரான அவன் தந்தை சிறந்த காவியம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார். காவியத்திலுள்ள சொற்களைப் பிரித்து அவற்றின் பொருளை அறிவதில் அவர் ஈடுபட்டிருந்தார். திடீரென்று அவருடைய மகன் அந்த நூலைக் கேட்டான். மறுக்க மனமில்லாத தந்தை, ஒரு கணக்கைச் சரியாகச் செய்தால் அந்த நூலைத் தருவதாகக் கூறினார். அதற்கு ஒப்புக் கொண்ட சிறுவன், தந்தை கொடுத்த கடினமான கணக்கை இரண்டுமணி நேரம் பொறுமையாக அமர்ந்து சரியாகச் செய்து, அந்தக் காவியத்தைப் பெற்றான்.

இந்த அறிவாற்றல் மிக்க சிறுவன்தான் பின்னர்ப் பாரத மக்களால் ''லோகமான்யர்'' என்று போற்றிப் புகழப்பெற்ற பாலகங்காதர திலகர். பண்பாட்டின் சிகரமாக வணங்கத்தக்க அறிவுத் திறனோடு திகழ்ந்த திலகர் வாழ்க்கை தாயகத்திற்குப் பெருமை தேடித் தந்த ஒன்று.

திலகர் 1856 ஆம் ஆண்டு சூலை மாதம் 23ஆம் நாள் பிறந்தார். மகாராட்டிர நாட்டு இரத்தினகிரியைச் சேர்ந்த இவருடைய தந்தை, பூனாவில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆதலால், திலகரின் கல்வியும் வாழ்வும் பூனாவிலேயே அமைந்தன.

ஆசிரியராக வாழ்வைத் தொடங்கிய இவர் ஆங்கிலப் பள்ளியும் கல்லூரியும் நடத்தினார். பின்னர், மக்களின் மனத்தில் விடுதலை வேட்கையை மூட்ட விரும்பினார் அதனால் "கேஸரி" "மராட்டா" என்னும் இதழ்களை நடத்தினார். பம்பாய் சட்டமன்றத்தின் உறுப்பினராகவும் அமர்ந்து அரிய பொதுப்பணி செய்தார்.

மக்களின் தொண்டராக இருந்த திலகருக்கு ஆங்கில அரசு பல தொல்லைகளைக் கொடுத்தது. சிறையிலிட்டு வாட்டியது. இருந்தாலும் திலகர் தமது பொதுப்பணியின் முனைப்பைக் குறைத்துக்கொள்ளவில்லை.

கணேச விழாவையும், மராட்டிய வீரன் சிவாஜி நினைவு விழாவையும் நாடெங்கிலும் சிறப்பாகக் கொண்டாடச் செய்த பெருமை திலகரையே சாரும்.

திலகர் எழுதிய "கீதா ரகசியம்" போன்ற நூல்கள் இன்றும் இறவாப் பெரும்புகழுடன் விளங்குகின்றன.

வ. உ. சிதம்பரனார் கப்பலோட்டிய செய்தியை நாம் முன்னரே அறிந்துள்ளோம். அவருக்கு வெளிநாட்டில் இருந்து கப்பல் வாங்குவதற்குப் பெருந்துணை செய்த பெருமகனார் திலகரே ஆவர். திலகரை வ. உ. சி. யும், பாரதியாரும் இணையற்ற தலைவராகப் பாராட்டியுள்ளனர்.

திலகர் தம் 64 ஆம் வயதில், 1920 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல்நாள் மண்ணுலக வாழ்வைத் துறந்தார். அப்பொழுது காந்தியடிகள், "மனிதருள் மாமனிதர் வீழ்ந்து விட்டார்; சிங்கத்தின் குரல் அடங்கிவிட்டது" என்று கூறினார். இதிலிருந்து திலகரின் அழியாப் பெரும் புகழை நாம் அறிந்துகொள்ளலாம்.

———

8. கவிக்குயில் சரோஜினி தேவி



"ஆசியாவினுள்ளே", என்றொரு நூலை எழுதிய ஒருவர் அந்த நூலில் ஓர் இந்தியப் பெண்மணியைக் குறித்து, "ஆசியாவிலேயே சிறந்த பெண்மணி - ஒரு கவியரசி - புரட்சியாளி, எத்தகைய பொருள் பற்றியும் சரளமாகச் சொற்பொழிவாற்றும் வல்லமையுடையவர்—ஓர் அரசியல்வாதி—ஒரு வீராங்கனை," என்று புகழ்ந்தார். இப்படிப் பல கோணங்களிலிருந்தும் போற்றத்தக்க சிறப்புப் பெற்றிருந்தவர்தாம் **கவிக்குயில் சரோஜினி தேவியார்.**

இந்தியா ஒரே நாடு என்பதை அவர் வாழ்வு காட்டுகின்றது. 1879ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் நாளில் ஒரு வங்காளப் பேராசிரியர் ஒருவருக்கு மகளாகப் பிறந்தார். ஓர் ஆந்திரக்காரரை அவர் மணந்தார்.

பன்னிரண்டாம் வயதில் பள்ளியிறுதித் தேர்வில் மாநிலத்திலேயே முதன்மையாகத் தேறிய இவர் உயர்கல்வி பெற இங்கிலாந்து சென்றார். அங்கு இவர் மனம் பாடத்தில் பதியவில்லை. இயற்கையழகில் நெஞ்சைப் பறிகொடுத்த இவர், கவிதைகள் எழுதினார். உடல்நலம் சீர்கெட்ட நிலையில் ஊர் திரும்பினார். பின்னர்த் திருமணம் நிகழ்ந்தது.

திருமணத்திற்குப்பின் கவிக்குயில் தம் குடும்பத்திற்குள் முடங்கியிருக்கவில்லை. இனிய முறையில் இல்வாழ்க்கை

நடத்திக்கொண்டே பொது வாழ்விலும் பங்கு கொண்டார். நாட்டுமக்களின் நெஞ்சில் விடுதலை வேட்கைக் கனலை மூட்ட அரும்பாடு பட்டார்.

சாதிமத வேறுபாடுகளை நீக்கிச் சமநிலை யமைந்த சமுதாயத்தை அமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டார்.

கவியரசியார் சிறந்த பேச்சாளர். நேருவின் நெருங்கிய நண்பர். காந்தியடிகளோடு ஆகாகான் மாளிகையில் சிறைப் பட்டிருந்த காலத்தில் அண்ணலுக்குத் தொண்டு செய்யும் பேறு பெற்றவர்.

கவியரசியார் காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அயல்நாடுகளில் சென்று நமது நாடு விடுதலைக்குப் போராடிய காரணங்களை விளக்கிச் சொற் பொழிவு செய்தார். அவரது கவிதைப் புலமைக்காக "கெய்சரி ஹிந்த்'' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

நாடு விடுதலை பெற்றவுடன் ஐக்கிய மாகாணத்தின் முதல் கவர்னராகப் பணியாற்றினார். இவரது மண்ணுலக வாழ்க்கை 1949ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இரண்டாம் நாள் முடிவு பெற்றது.

பெண்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் மிகவும் உயர்ந்த நிலைக்கு வருவார்களென்பதற்கும், வீட்டுக் கடமைகளோடு நாட்டுப் பொறுப்பிலும் பெண்கள் பங்குபெறும்பொழுது, நாடு மேம்பாடு அடையுமென்பதற்கும் கவியரசியார் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

9. அன்புக்கோர் அன்னை



தாம் பெற்ற பிள்ளைகளுக்கு மட்டும் அன்னையாக இருக்கும் பெண்களைப் பார்க்கின்றோம். ஆனால் இத்தகையவர்களை உலகம் மிகப் பெருமையோடு நினைத்துப் பார்ப்பதில்லை. அன்பு வட்டத்தை விரிவுபடுத்தி உலகத்து மக்களை எல்லாம் அணைத்துக்கொண்ட ஓர் அன்னை உள்ளார். அவரை நினைக்க நமது உள்ளம் உருகும். மாதர்குல மாணிக்கமான அவரது புகழ், உலக வரலாறு உள்ளளவும் நிற்கும். அத்தகைய சிறப்புக்குரியவர் பலராலும் "பா" என்று அழைக்கப்பெற்ற அன்னை கஸ்தூரிபாய் அவர்களே.

அன்னையின் வாழ்க்கை அருமையானது. அவரது வாழ்க்கை அரும்பி, மொட்டாகி, மலர்ந்து மணம் பரப்பி இறைவனடிடைச் சேர்ந்ததுவரை, அவரோடு காந்தியடிகள் இருந்தார். அண்ணலின் நிழலாக அவரைத் தொடர்ந்து சென்ற அன்னையார் பட்ட துன்பங்கள் அடுக்க அடுக்க விரியக்கூடியன. காந்தியடிகள் தமது வாழ்வைமட்டும் சத்திய சோதனைக்குள்ளாக்கவில்லை; தமது குடும்பத்தையே சோதனைக்குள்ளாக்கினர். அதில் பெரும்பாலும் சோதனைப் பொருளாக இருந்தவர் அன்னை கஸ்தூரிபாயே.

கஸ்தூரிபாய் காந்திக்குப் பதின்மூன்றும் வயதில் திருமணம் நிகழ்ந்தது. தொடக்கத்தில் கணவரின் முன்கோபத்திற்கு இவரால் ஈடுகொடுக்க முடியவில்லை.

அடிக்கடி உணர்ச்சி வயப்படும் கணவர் தம்மை அடிமைப் படுத்த முயன்ற பொழுது எதிர்த்து நின்றதும் உண்டு ஆனால் காலம் செல்லச் செல்லக் காந்தியடிகள் என்ற விளக்கிற்குத் தம்மை எண்ணெயாகப் படைத்துப் பழகிக் கொண்டார்.

வாழ்ந்தது பெரும்பாலும் ஆசிரமத்தில். கணவருக்குப் பணிவிடை செய்ய வந்த ஆசிரமப் பெண்களைத் தடுத்த தில்லை. ஒரு பக்கம் வழிதவறிப் போன மூத்த மகனைப் பற்றிய கவலை, மறுபக்கம் உண்ணாவிரதமென்றும், உரிமைப் போராட்டமென்றும் தமது உடலை வாட்டிக்கொண்டிருந்த கணவரைப் பற்றிய கவலை. அன்னையார் தம்மைப்பற்றி என்றும் கவலைப்பட்டதில்லை. அவரது கவலையெல்லாம் கணவர், குழந்தைகள், நாடு என்ற மூன்றைப்பற்றியவை.

பள்ளிசென்று படித்தறியாத அன்னையார் தமது இறுதிக் காலத்தில் சிறைச்சாலையில் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டார். நாட்டுக்காகச் சிறையும் சென்றார்.

மனம்போல் வாழ்வு முடிந்தது. 1944ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 22ஆம் நாள் கணவரின் மடியில் தலை சாய்த்து, இராமர் திருப்பெயரைக் கேட்டுக்கொண்டே அன்னை தமது இறுதிமூச்சை விட்டார்.

காந்தியடிகளின் திருப்பெயர் உள்ளவரை கஸ்தூரி பாவின் திருப்பெயரும் வாழும்.

———

10. அமைதி காத்த அருமைத் தலைவர்



இரண்டு நாடுகளுக்கிடையில் போர் மூண்டால் பொங்கி எழுந்து பழி வாங்கும் வெறியோடு போராடும் அரசியல் தலைவர்களையே உலகவரலாறு கண்டிருக்கின்றது. ஆனால் இதற்கு மாறாகப் போரிட்ட காலத்திலும் அமைதி வேண்டி முயன்று வெற்றி கண்ட தலைவர் ஒருவர் உண்டு. தாய்த்திரு நாட்டின் நலனுக்காக அல்லும் பகலும் பாடுபட்ட அவர் உயிர் வேற்று நாட்டில் பிரிந்தது. உலகத் தலைவர்கள் அவரது பொன்னுடலைத் தூக்க ஒப்பற்ற புது வரலாறு பிறந்தது. இவ்வளவு பெருமைக்கும் புகழுக்கும் உரியவர்தாம் **லால் பகதூர் சாஸ்திரி.**

காந்தியடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாம் நாளிலேயே பிறந்தவர் லால்பகதூர்; பிறந்த ஆண்டு 1904. அவர் ஒரு கிராமவாசி. ஏழை ஆசிரியரின் மகன். இவருக்கு இரண்டு ஆண்டு முடியும் முன்பே இவருடைய தந்தையின் வாழ்க்கை முடிந்துவிட்டது.

இவரையும், இவருடைய இரண்டு சகோதரிகளையும், அன்னையையும் காக்கும் பொறுப்பை இவருடைய தாத்தா ஏற்றுக்கொண்டார். உடலை வாட்டிய வறுமை இவருடைய உள்ளத்தை வாட்டவில்லை. ஆகையால் படிப்பை மறந்திலர்.

பள்ளியிறுதி வகுப்பில் படிக்கின்றபொழுதே அண்ணல் காந்தியடிகளால கவரப்பட்டு நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். சிறுவரென்ற காரணத்தால் தண்டனை கிடைக்கவில்லை. இருந்தாலும் லால்பகதூர் பள்ளிப் படிப்பைத் தொடரவில்லை. பின்னர்க் காசி வித்தியாபீடத்தில் சமற்கிருதத்தில் 'சாஸ்திரி' என்ற பட்டம் பெற்றார்.

லால்பகதூர் சாஸ்திரி தொண்டராக வாழ்வைத் தொடங்கினர். மக்களின்மீது கொண்ட அன்பு அவருக்கு ஆற்றலை வழங்கியது. நாட்டுப்பற்று அவரை வாழ்வெல்லாம் இயக்கியது. மாநில அமைச்சராகவும், மத்திய அமைச்சராகவும் பணியாற்றிய அவர் நேருவுக்குப்பின் நமது நாட்டின் தலைமையமைச்சரானர்.

பாகிஸ்தானியர் எல்லை தாண்டி வந்தபொழுது, நாட்டைக் காக்கும் பெரும்பணியைத் திறம்படச் செய்தார். பாகிஸ்தான் தலைவரோடு ரஷ்யாவிலுள்ள தாஷ்கண்டில் சமாதான ஒப்பந்தம் செய்தார். அன்றே 1966ஆம் ஆண்டு சனவரி 10ஆம் நாள் இயற்கையோடு கலந்தார். இந்திய மக்கள் இதயத்தில் நின்று நிலவுகின்றார்.

11. அருமைத் தலைவர்



இந்தியப் பண்பாட்டின் உருவமாக, இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குச் சான்றாக, நாட்டுத் தொண்டிற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் டாக்டர் ஜாகீர் ஹுசேன். இந்த மண்ணுலகில் வாழ்ந்த 72 ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து பாரதத்தின் ஜனாதிபதியாக விளங்கிய அவர் இனிமை, எளிமை, தூய்மை ஆகிய பண்புகளின் நிலைக்களமாக விளங்கினார்.

இவர் 1897 ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் வழக்கறிஞர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். இவருடைய 9 ஆம் வயதில் தந்தை இறந்தார். 1907 இல் இவர் குடும்பம் உத்தரப் பிரதேசத்தில் குடியேறியது. அங்குக் கல்வி கற்ற இவர் பெர்லின் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றார்.

1920 இல் காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். கல்வி, பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதன் மூலமாக நாட்டு மக்கள் மனத்தில் நாட்டுப்பற்றைத் தோற்றுவிக்கக் கருதிய இவர் ஜமியா மிலியா என்ற பல்கலைக் கழகத்தை நிறுவினார். சமுதாயத்தில் புது அணுகல் முறையின் மூலம் விழிப்புணர்ச்சியைத் தூண்டும் பணியில் ஜமியா மிலியா பணியாற்றியது. இதன் துணைவேந்தராக இவர் 30 ஆண்டுகள் பணியாற்றினார்.

இவருக்கு ஆதாரக் கல்வியில் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆதாரக் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்தார். இவருடைய தலைமையில் அமைந்த குழு ஆதாரக் கல்விபற்றி ஆராய்ந்து தொடர்ந்து பலவகையான ஆக்கப் பணிகளில் ஈடுபட்டது. பல தேசிய, உலக நிறுவனங்களில் உறுப்பினராகித் தொண்டு செய்தார். இவருக்கு 1954 இல் "பத்ம விபூஷன்" பட்டமும், 1963 இல் "பாரத ரத்னு" பட்டமும் அளிக்கப்பெற்றது.

1962 இல் நமது நாட்டின் துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருர். 1967 இல் நமது நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ருர்.

இனிய அரிய பண்புகள் பல கொண்ட ஜனாதிபதி ஜாகிர் ஹுசேன் ஒரு சிறந்த எழுத்தாளர். பலநூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'முதலாளித்துவம்' 'போதனை' என்னும் நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை.

ஜாகிர் ஹுசேன் 1969ஆம் ஆண்டு மேத் திங்கள் 3ஆம் நாள் இயற்கையில் கலந்தார். நாட்டு மக்களின் நெஞ்சில் வாழ்கின்ருர்.

---

12. புரட்சி வீரர்



மனித இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டு அழியாப் புகழ் பெற்ற தலைவர்கள் பலர். அவர்கள் எல்லோரும் ஒரே வழிமுறையைப் பின்பற்றவில்லை. தாங்கள் வாழ்ந்த நாட்டின், காலச் சூழ்நிலைகளுக் கேற்ப அவர்கள் வெவ் வேறு வழிமுறைகளைப் பின்பற்றினர். புரட்சியின் மூலமாக விலங்குகளாக நடத்தப்பட்ட தமது தாய்நாட்டு மக்க ளுக்கு விடுதலையையும் புதிய வாழ்க்கையையும் பெற்றுத் தந்தார் தலைவர் ஒருவர். அவர் பிறந்து நூற்றாண்டுகள் முடிந்துவிட்டன. அவர் பெயர் தான் லெனின்.

லெனின் 1870ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் ரஷ்யாவில் சிம்பிர்ஸ்க் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தை ஒரு சிறிய அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ரஷ்யா ஜார் மன்னனின் ஆட்சியின் கீழிருந்தது. மன்னனும் செல்வர்களும் வைத்ததே சட்டமாக இருந்தது. மக்கள் பட்ட துயரங்கள் எழுத்தில் அடங்கா. ஆசிரியராக இருந்த லெனினின் தமையனுரைப் புரட்சி வேலைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி ஜார் அரசு தூக்கிலிட்டது.

நாட்டிலிருந்த கொடுங்கோன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற இலட்சிய நோக்கம் லெனின்

இதயத்தில் மூண்டு வளர்ந்தது. வழக்குரைஞர் பட்டம் பெற்ற லெனினை அரசு "அஞ்சத்தக்கவர்" என்று கூறி நாடு கடத்தியது. 1895இல் சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்றார். 1897இல் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். 1900ஆம் ஆண்டு "நெருப்புப் பொறி" என்னும் பொருள் தரும் "இஸ்க்ரா" என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார். 1905இல ரஷ்யாவில் விவசாயிகள் புரட்சி நடத்தியபொழுது மறைவாகத் தாய்நாட்டிற்குள் வந்தார். ஆனால் புரட்சி தோல்வியடைந்ததால் மறுபடியும் நாடு கடத்தப்பட்டார்.

தமது எழுத்தாலும் செயல் திட்டங்களாலும் ரஷ்யத் தொழிலாளர்களையும் உழவர்களையும் படைவீரர்களையும் இணைத்தார். 1917இல் புரட்சி வெற்றி பெற்றது. லெனின் கனவு கண்ட பொதுவுடைமை சமுதாயம் அமைந்தது. புதிய ஆட்சியில் லெனின் தம் திட்டங்களைச் செயல் படுத்தினார்.

புரட்சித் தலைவரான லெனின் 1924இல் இறந்தார். ஆனால் உலக மக்களின் உள்ளங்களில் வாழ்கின்றார்.

---

13. இங்கிலாந்தின் இலக்கிய மேதை



வாழ்க்கையின் அடித்தளத்தில், வறுமையின் கோரப்பிடியில் சிக்கி அல்லற்பட்டார் ஒருவர். இளமையில் அவர்பட்ட துயரங்களை எழுத்தில் வடித்துவிட முடியாது. குழந்தைப் பருவத்தில் வந்த கண்டமாலை என்னும் நோய் அழகைக் கொள்ளை கொண்டது. ஒரு கண்ணும் போனது. பலராலும் ஒதுக்கப்பெற்ற அவர் பிறர்கண்டு தலை வணங்கும் வகையில் புலமையும் திறமையும் பெற்று விளங்கினார். இத்தகைய புகழோடும் பெருமையோடும் திகழ்ந்த பெரியவரின் பெயர் **சாம்யூயல் ஜான்சன்.**

ஜான்சன் இங்கிலாந்திலுள்ள லிச்ஃபீல்டு என்னுமிடத்தில் 1769ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு புத்தக வியாபாரி. ஆதலால் ஜான்சனுக்கும் படிக்க ஏராளமான புத்தகங்கள் கிடைத்தன. எல்லாவற்றையும் அவர் படித்தார். அவரது உள்ளத்தில் இலக்கியத்திபம் சுடர்விட்டது.

கோரமான உருவத்தோடு, வறுமையான நிலையில் இருந்த ஜான்சனை மற்றவர்கள் எள்ளி நகையாடும் போக்குக் காணப்பட்டதால், அவரிடம் ஒரு முரட்டுத்தனமான போக்கு வளர்ந்தது. அவர் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகாமல் தற்பெருமையோடு வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் திருமணம் செய்துகொண்டது அவரைப்போல் இரண்டு பங்கு வயதாகியிருந்த ஒரு மங்கை. அந்த அம்மாளின் அன்புத்துணையில் அவர் இலக்கியக் கடலில் மேல் நோக்கிச் சென்றார்.

முதலில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆனால் அதனைத் தொடர்ந்து செய்ய அவரால் முடியவில்லை. 1737 இல் இலண்டனுக்குச்சென்று எழுத்துப்பணியை மேற்கொண்டார். அவரது முதல் சொல்லணிக்கவிதை நூலான "மனிதனின் ஆசைச் செருக்கு" என்பது அவருக்குச் சிறந்த பெயரை வாங்கிக் கொடுத்தது.

ஜான்சனின் மிகப்பெரிய இலக்கியச் சேவை என்று குறிப்பிடக் கூடியது 1755 இல் அவர் ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்து வெளியிட்டதாகும். அவருக்குத் தொடக்கத்தில் உதவ மறுத்தவர்கள்கூட பின்பு உதவ முன்வரும் நிலை ஏற்பட்டது. இங்கிலாந்து மன்னர் 1762 இல் ஜான்சனுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தார். ஜான்சன் சிறந்த இலக்கிய வழிகாட்டியாகவும், விமர்சகராகவும் இருந்தார். 1768 இல் ஜான்சன் இயற்கை எய்தினார்.

ஜான்சனின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுவையோடு ஜேம்ஸ் பாஸ்வெல் என்பவர் எழுதியிருக்கிறார்.

———

14. புரட்சித் தந்தை



ஓர் ஆற்றல்மிக்க எழுத்தாளர். அவர் எழுதிய எழுத்துகளில் புரட்சிக் கனல் தெறிப்பதைக் கண்டு வாழ்க்கையில் மேல்மட்டத்திலிருப்பவர்கள் முகம் சுளித்தனர். முடியாட்சிக்குப் பதில் குடியாட்சி மலர வேண்டுமென்ற அவர்தம் கருத்துகளைக் கண்டு ஆட்சியாளர்கள் நடுங்கினர். அவருக்குத் தொல்லைகள் கொடுக்க முற்பட்டனர். ஆனால் அவர் எதனைக் கண்டும் அஞ்சவில்லை. துப்பாக்கி ஏந்திய வீரன் ஒருவன் எதிரிகளைத் தாக்கி மேலே ஊடுருவி செல்வதைப் போல, அவர் தமது பேனாவினால் அல்லற்படுகின்ற ஏழை எளியவர்களுக்காகப் போராடிக் கொண்டே முன்னேறினார். அவர் மறைந்து பதினோர் ஆண்டுகளுக்குப் பிறகு அவரது உயிரூட்டமுள்ள எழுத்து பெரும் புரட்சித்தீயை மூட்டியது. அவரை அனைவரும் புரட்சித்தந்தை என்று போற்றினர். அவர் பெயர் ரூசோ என்பது.

ரூசோ சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஜெனீவா நகரில் 1712 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28ஆம் நாள் பிறந்தார். அவர் பிறந்த சில நாட்களிலேயே அவருடைய அன்னையார் இறந்துவிட்டார். தந்தையே தாயாகவும் குருவாகவும் இருந்து அவருக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுத்தார். ஆனால் தந்தையின் அன்பும் தொடர்ந்து கிடைக்க வாய்ப்

யில்லாமல் ஒழிந்தது. அவர் ஒரு செல்வரைப் பகைத்துக் கொண்டார். அதனால் அவர் ஊரை விட்டு ஓட நேர்ந்து விட்டது. அதன்பின் ரூசோ சில ஆண்டுகள் அவருடைய சிற்றப்பாவின் ஆதரவில் இருந்தார்.

ரூசோ சிந்தனையாளர்; அவருக்கு எழுதுவது தவிர வேறு எதிலும் ஈடுபாடு இல்லை. தாம் வாழ்கின்ற சமுதாயத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்ற தீராத வெறியோடு அவர் எழுதினார். ரூசோவின் எழுத்துகள் மக்களின் சிந்தனையைத் தொட்டன. ஆட்சியாளர்கள் அவரைச் சிறையிலிட முயன்றபொழுதெல்லாம் அகப்படாமல் நாடு கடந்தார். இதனால் அவர் பல நாடுகளுக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

அவர் இலண்டனில் தங்கியிருந்த பொழுது அவருக்கு அழியாத புகழைத் தேடித்தந்த "சமுதாய ஒப்பந்தம்" என்னும் சிறந்த நூலைப் படைத்தார். 1770இல் பாரிசுக்குத் திரும்பினார். அவரின் எழுத்துகளில் மிகவும் ஈடுபாடு கொண்ட செல்வர் ஒருவர் அவருக்குத் தங்கியிருக்க ஒரு மாளிகையைக் கொடுத்தார். எட்டாண்டுகள் அந்த மாளிகையில் ஓய்வாக இருந்த ரூசோ 1778 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 2ஆம் நாள் மறைந்தார்.

பிரெஞ்சுப் புரட்சியில் உயிர்த்துடிப்பாகப் பயன்படுத்தப்பெற்ற "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற மும்மணிகளைத் தந்த ரூசோவின் புகழ் இன்றும் என்றும் நிலைத்து நிற்கும்.

———

15. அணுவின் ஆற்றலைக்கண்டவர்



அணுக்குண்டின் தீயவிளைவுகளை இன்றைய உலகம் நன்கு உணர்ந்துள்ளது. இத்தகைய அழிவுக் கருவி அறிவியலின் குழந்தை. அறிஞர்கள் அறிவை ஆக்கத்திற்குப் பயன்படுத்தவே விரும்புகின்றனர். ஆனால் அரசியல் தலைவர்கள் அதிகாரத்தைப்பெற, நிலைநாட்ட, அறிவியலின் துணையை நாடுகின்றபொழுது, அறிவியல் குழந்தைகள் அழிவுக்கும் பயன்படுகின்றன. இந்த உண்மையைத்தான் அணுகுண்டு காட்டுகின்றது.

அணுக்குண்டின் அடிப்படையான அணுவின் ஆற்றலைக் கண்டு உலகிற்கு உரைத்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டின். சிறந்த கணித மேதையான அவருடைய ஆராய்ச்சிகள் அறிவியலின் எல்லைகளை விரிவுபடுத்தின.

ஐன்ஸ்டின் ஜெர்மனியில் 1879ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 14ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் ஒரு மின்னியல் தொழிற்சாலையைச் சிறிய அளவில் நடத்திக் கொண்டிருந்தார். அவர் தாயாருக்கு இசையில் நல்ல பயிற்சி உண்டு. அவர் ஐன்ஸ்டினுக்கு இசையை நன்கு கற்றுக் கொடுத்தார்.

ஐன்ஸ்டின் பள்ளிக் கல்வியில் மிகுந்த ஆர்வம் கொள்ளவில்லை. அவரது ஆர்வம் எல்லாம் கணிதத்தில் இருந்தது.

விளையாட்டுக்கூட அவருக்குப் பிடிக்கவில்லை. அவர்தம் சிற்றப்பாவிற்கும் கணிதத்தில் விருப்பம் உண்டு. அவர் ஐன்ஸ்டினுக்கு கணிதத்தைக் கற்றுக்கொடுத்தார்.

ஐன்ஸ்டினின் குடும்பம் ஜெர்மனியிலிருந்து இத்தாலிக்குச் சென்றது. ஐன்ஸ்டின் ஸ்விட்ஜர்லாந்தில் மேற்படிப்புப் படித்தார். பௌதிக ஆசிரியராக வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் அவரது விருப்பம் நிறைவேறவில்லை. குடும்பம் வறுமையில் வாடியது. ஆதலால் 1905 முதல் ஒரு வாணிகச் சின்னம் பதிவு செய்யும் அலுவலகத்தில் சிறிது காலம் பணியாற்றினார். இருந்தாலும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார். "பொருளும் ஆற்றலும்" பற்றிய அவர் ஆராய்ச்சி அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது.

1909 முதல் நான்காண்டுகள் ஸூரிச் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பின் பெர்லினில் உள்ள வில்ஹெல் பல்கலைக் கழகத்தில் இயக்குநராகப் பணியாற்றினார். அதன் பிறகு அமெரிக்கா சென்று பிரின்ஸ்டன் கணிதப் பள்ளியின் இயக்குநராகப் பதவியேற்றார்.

1921ஆம் ஆண்டில் பௌதிக ஆராய்ச்சிக்குரிய நோபல் பரிசை ஐன்ஸ்டினுக்கு வழங்கினர். தொடர்ந்து கணிதத் துறையின் வளர்ச்சிக்காக அரும்பணி புரிந்தார். அதனால் அழியாப்புகழ் பெற்றார்.

ஐன்ஸ்டின் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் மறைந்தார்.

———

16. அரும்பணி புரிந்த அறிவியல் மேதை



உலகின் புற ஆரவாரத்தில் நெஞ்சைப் பறிகொடுக்காமல் ஆராய்ச்சியிலேயே தம்மை ஈடுபடுத்திக்கொண்டார் ஓர் அறிவியல் மேதை. "எனக்கு ஆராய்ச்சிக்கு வேண்டிய வாய்ப்புக்களை வழங்குங்கள்; ஐந்தாண்டுகளில் நோபல் பரிசு பெறுகின்றேன்," என்று 1925இல் கூறி, அறிவின் திறத்தால் 1930ஆம் ஆண்டில் அப் பரிசைப் பெற்றுக் காட்டினார் அவர். திண்ணிய உள்ளம் படைத்த அன்னார் இந்தியாவுக்கு அறிவியல் துறையில் அழியாத பெரும்புகழ் தேடிக் கொடுத்தார். அவர்தாம் டாக்டர் சி. வி. இராமன்.

சந்திரசேகர வேங்கடராமன் திருச்சியில் 1888ஆம் ஆண்டு நவம்பர் ஏழாம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் விசாகபட்டினத்தில் ஒரு கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

சி. வி. இராமன் விசாகபட்டினத்தில் முதலில் படித்தார். பின்னர்ச் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் படித்துப் பட்டங்கள் பெற்றார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதைப்போலப் படிக்கின்ற காலத்திலேயே ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவர்தம் ஆய்வுக் கட்டுரைகள் பெரிய அறிவியல் இதழ்களில் அவர் மாணவராக இருக்கின்ற பொழுதே வெளிவந்தன என்பது கவனிக்கத்தக்கது.

1907ஆம் ஆண்டு இந்திய நிதித்துறையில் ஓர் அதிகாரியாகத் தேர்வு பெற்றார். 1917 வரை அரசின் ஊழியராகப் பணியாற்றிய காலத்திலும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்தார். இதன் விளைவாக 1917ஆம் ஆண்டில் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் பௌதிகப் பேராசிரியராகப் பணி புரியும் வாய்ப்பைப் பெற்றார்.

இந்திய அறிவியல் ஆராய்ச்சி மன்றத்தின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றினார். ஒளியைப்பற்றிய ஆராய்ச்சிக்காக 1930இல் நோபல் பரிசைப் பெற்றார். அவரது ஆராய்ச்சிக்காகப் பல பல்கலைக்கழகங்கள் அவருக்குப் பட்டங்களை வழங்கின. அவர் பெற்ற பட்டங்களை எழுதினால் மூன்று பக்கங்களுக்கு மேல் வருமாம்.

பெங்களூரில் ''இராமன் ஆராய்ச்சி நிலையம்'' ஒன்றைத் தொடங்கினார். 1954இல் அவருக்குப் "பாரத இரத்தின" பட்டம் வழங்கப்பெற்றது.

''அறிவியல்தான் எனது சமயம்; இறுதிவரை அதையே நான் தொடர்ந்து பின்பற்றிச் செல்வேன்'' என்று கூறிய இம் மேதை இயற்கையிடமும் மலர்களிடமும் தமது மனத்தைப் பறிகொடுத்திருந்தார். மலர்களின் வண்ணங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

பல அரிய நூல்களை எழுதிய டாக்டர் சி. வி. இராமன் 1970ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 21ஆம் நாள் தமது 82ஆம் வயதில் பெங்களூரில் காலமானார். அவருக்காக நாடே கண்ணீர் விட்டது. அவரது புகழ் எழுத்திலடங்காது.

———

17. உலகப் பரிசளித்த உத்தமர்



உலகம் போற்றுகின்ற உயர்ந்த பரிசை வழங்கி உலகப்புகழ் பெற்ற உத்தமர் ஆல்பிரடு நோபெல். இவரது வாழ்க்கையில் மற்றவர்கள் அறிந்து பின் பற்றவேண்டிய பல அரிய பண்புகள் அமைந்திருந்தன.

ஆல்பிரடு நோபெல் 1833 ஆம் ஆண்டில் அக்டோபர் 21ஆம் நாள் சுவிஸ் நாட்டிலுள்ள ஸ்டாக்ஹோம் நகரத்தில் பிறந்தார்.

பள்ளிப் படிப்பை முடித்த பிறகு பொறியியலைக் கற்க அமெரிக்காவிற்குச் சென்றார். ஆனால் அவர் மனமோ வெடிகளைப்பற்றியே ஆராய விரும்பியது. ஆதலால் தாயகம் திரும்பி வெடிகள் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டார். சுரங்கங்களில் பாறைகளைத் தோண்டப் பயன்படக்கூடிய பல பாதுகாப்பான வெடிகளைக் கண்டுபிடித்தார்.

பலரின் ஆதரவோடு வெடிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நோபெல் தொடங்கினார். ஆனால் 1864 இல் நடைபெற்ற ஒரு வெடி விபத்தால் தொழிற்சாலை அழிந்தது. அதனால் அவர் மனம் தளரவில்லை. விரைவிலேயே மற்றவர்களின் ஆதரவோடு வேறொரு தொழிற்சாலை அமைத்துக்கொண்டார்.

நோபெலின் அரிய கண்டுபிடிப்புகளைப் பாராட்டி 1866இல் சுவிஸ் அறிவியல் கழகம் அவருக்குப் பொற் பதக்கம் பரிசளித்தது. இதனால் அவர்தம் புகழ் பரவியது. அவர்தம் கண்டுபிடிப்புகளான வெடிகளுக்கு உலகெங்கும் தேவை ஏற்பட்டது. அவர்தம் தொழிற் கூடங்கள் விரிவு பெற்றன. இதனால் கோடி கோடியாகப் பணம் குவிந்தது.

திருமணம் செய்யாது வாழ்ந்த நோபெல் தம் தாயின் வழியாக வந்த செல்வத்தைத் தாயின் நினைவாக மருத்துவ அறிவியலில் சிறந்த ஆராய்ச்சி செய்பவருக்குப் பரிசளிக்க ஏற்பாடு செய்தார். அவர்தம் இறுதிக் காலத்தில் தமது திரண்ட செல்வத்தை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் வாரி வழங்கினார். அதோடு ஆண்டு தோறும் வழங்கக் கூடிய ஐந்து நோபெல் பரிசுகளையும் ஏற்படுத்தினார். இந்த ஐந்து பரிசுகளும் அறிவியல், இயைபியல், உடற்கூற்று மருத்துவம், இலக்கியம், உலக அமைதி ஆகிய துறைகளில் வியத்தகு சாதனைகளைச் செய் தவர்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்தார். இந்தப் பரிசுகள் அவர் மறைவு நாளான திசம்பர் 10ஆம் நாளில் வழங்கப் பெறுகின்றது. இந்தப் பரிசுகளின்மூலம் உலகம் உள்ள அளவும் நிலைத்து நிற்கும் பெயரை நோபெல் பெற்று விட்டார்.

———

18. அழிவைக் குறைத்த அறிவியலறிஞர்



மனித இனத்தைத் தாக்கி அழிக்கின்ற நோய்கள் பல. இத்தகைய நோய்களைப் பரப்புபவை கண்ணுக்குத் தெரியாத நோய் நுண்ணுயிரிகள். அவற்றைக் கட்டுப்படுத்தாமல் நோய் பரவுவதைத் தடுக்க முடியாது. முதன் முதலாகத் தொற்றுநோய் பரவுவதை ஊசி போட்டுத் தடுக்கும் முறையை ஓர் அறிவியலறிஞர் கண்டுபிடித்தார். அவர் முயற்சியின் விளைவாக எண்ணற்ற மக்களின் உயிர்கள் காக்கப்பெற்றுள்ளன. அழியாப் புகழ்பெற்ற அவரது பெயர் லூயி பாஸ்டியர் என்பது.

அவர் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். 1822 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 27 ஆம் நாள் டோல் என்னும் ஊரில் ஒரு போர் வீரரின் மகனாகப் பிறந்தார். அறிவியலை முறைப்படி கற்றுத் தேர்ந்த அவர் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். முதலில் டிஜான் கல்லூரியிலும், பிறகு ஸ்டிராஸ்பர்க் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பாஸ்டியரின் மனைவி மேரி அவருடைய ஆராய்ச்சிப் பணிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தார். அவர் குடும்பத்தைப்பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் இருக்கும்படி குடும்பத்தைப் பேணிக்காத்தார். மேலும், பாஸ்டியருக்கு அவரது ஆராய்ச்சிக் குறிப்புக்களை எழுதுவதில் உதவி செய்தார்.

பாஸ்டியர் தமது அறிவுத்திறனை நாட்டில் அப்பொழுது தோன்றிய சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தினர். பிரான்சு நாட்டில் மது உற்பத்தியில் ஒரு சிக்கல் எழுந்தது. சில இடங்களில் பீப்பாயில் வைத்திருந்த மது கெட்டுவிட்டது. இதற்குக் காரணம் பாக்டிரியாக்கள் என்ற உயிர்க் கிருமிகள் என்பதைக் கண்டுபிடித்து அவற்றைப் பரவாமல் எப்படித் தடுப்பதென்பதையும் ஆராய்ந்து கூறினர்.

பட்டுப்பூச்சிகளை ஒரு வகையான நுண்ணுயிரிகள் தாக்கி அழித்தன. இதனல் பிரான்சில் பட்டுத்தொழில் அழிந்துபோகும் நெருக்கடி தோன்றியது. பாஸ்டியர் தம் ஆராய்ச்சிமூலம் அந்தக் கிருமிகளை அழித்துப் பட்டுத் தொழிலைக் காப்பாற்றினர். இதே போல் கோழிகளைத் தாக்கும் உயிரிகளைத் தடுக்கவும் வழிமுறைகளைக் கண்டு பிடித்தார்.

அவருடைய கண்டுபிடிப்புகளில் தலையாயது வெறி நாய்க் கடிக்கு ஆட்பட்டவரைக் குணப்படுத்தத் தக்க மருந்து கண்டதுதான். அதற்கு முன்னல் வெறிநாய் கடித்தவர்களைப் பிழைக்க வைக்க வழியில்லாதிருந்தது.

பாஸ்டியர் 1895 செப்டம்பர் 27 ஆம் நாள் இறந்தார். அவரது அழியாத புகழுக்குக் காரணம் இந்த மனித குலத்தைக் காக்க அவர் செய்த ஆராய்ச்சிகளும் பெற்ற வெற்றிகளுமே. லூயி பாஸ்டியரின் வாழ்க்கை அறிவியலறிஞர்களுக்கு நன்கு வழிகாட்டக்கூடியதாகும்.

19. அமெரிக்க காந்தி



மனிதகுலம் நிறத்தாலும் இனத்தாலும் வேறுபட்டு நிற்காமல், சரிநிகர் சமானமாக ஒத்த உரிமையோடு வாழ அயராது உழைத்த அறத் தலைவர்களுக்கு அளிக்கின்ற பரிசு குண்டாகவே இருக்கின்றது. இதனை டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மாசற்ற அறவாழ்க்கை மறுபடியும் வலியுறுத்திக் கூறுகின்றது.

காந்திய அகிம்சை வழியில் அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களுக்குச் சம உரிமை வாங்கித்தர மார்ட்டின் லூதர்கிங் மேற்கொண்ட முயற்சிகள் பெருமைக்குரியவை. முப்பத்தொன்பது வயதே ஆன அவர் காந்தியடிகளின் வழிமுறைகளில் அசையா நம்பிக்கையுடன் சமாதான வழியில் சென்றது பலாத்கார விரும்பிகளை வியக்கச் செய்தது.

மார்ட்டின் லூதர் கிங்கின் வாழ்க்கை எளிமையானது. ஆனால், இமயமலையின் கொடுமுடிபோல் தூய்மையுடன் பளிங்குபோல உயர்ந்து நின்ற குறிக்கோளைக் கொண்டது. இவர் 1929ஆம் ஆண்டு சனவரி மாதம் 15ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா மாநிலத்தில், அட்லாண்டா நகரில் ஓர் உபதேசியாரின் மகனாகப் பிறந்தார். நீக்ரோ இனத்தைச் சேர்ந்த இவரைக் கறுப்பர் என்பதற்காக வெள்ளையர்கள் இழிவுபடுத்தியது இவரது மனத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

தமது 19ஆம் வயதில் கிங் பட்டம் பெற்ருர். பின் தம் இருபத்தாரும் வயதில் தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்ருர். மதகுருவாகவும் மாறினர்.

காந்தியடிகளின் கருத்துகளால் கவரப்பட்ட அவர் அவற்றை நன்கு கற்ருர். அதே வழியைப் பின்பற்றி நிற வேற்றுமையை ஒழிக்க முடிவு செய்தார். 1957 ஆம் ஆண்டில் அட்லாண்டாவில் தென் கிறித்தவத் தலைமை மாநாடு என்ற ஒரு நிறுவனத்தை அமைத்தார்; பேருந்துகளில் கறுப்பர்களுக்குத் தனியிடம் ஒதுக்குவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். நீக்ரோக்களின் அச்சத்தை அகற்றி, அகிம்சை வழியில் உரிமைகளைப் பெற முடியுமென்ற நம்பிக்கையைச் செயலின்மூலம் காட்டினர்.

1964இல் சமாதானத்திற்காகப் பெற்ற நோபெல் பரிசை நிற ஒழிப்பு இயக்கத்திற்கு வழங்கினர். நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான மார்ட்டின் லூதர்கிங் 4-4-68இல் சுட்டுக்கொல்லப்பட்டார். லூதர்கிங்கின் புகழ் என்றும் நின்று நிலவும்.

———

20. அருளொளி பெற்ற வள்ளலார்



"இச்சாதி சமயவிகற்
பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்க
பொதுவடைதல் வேண்டும்"

என்ற உயரிய சித்தாந்தத்தை உலகிற்கு வழங்கிய அருட்சோதி இராமலிங்க வள்ளலார் வாழ்ந்த வாழ்வும் வழங்கிய கருத்து மணிகளும் மக்களின் உள்ளத்தில் தூய்மை சேர்க்கத்தக்கன.

அருட்பிரகாச வள்ளலாரென்னும் இராமலிங்கர் இளமையிலேயே தந்தை இறந்ததால் அண்ணனின் ஆதரவில் சென்னையில் வளர்ந்தார். அவர்க்குப் பள்ளிப்படிப்பில் கருத்துச் செல்லவில்லை. இறையருள் வேட்கையே மிகுந்திருந்தது.

தமது ஒன்பதாம் வயதிலேயே கந்தப்பெருமானைக் கண்ணாடியில் கண்டவரென்று இவரைக் கூறுகின்றனர். அண்ணனுக்காகச் சைவசமயச் சொற்பொழிவிற்குச் சென்ற இராமலிங்கர் பக்திப் பாடல்களைப் பாடி, உள்ளம் கட்டுண்டு கிடக்கும் முறையில் புராணச் சொற்பொழிவு செய்து தனிப்புகழ் பெற்றார்.

இளைஞராக இருந்த பொழுது இராமலிங்கர் தடுத்தும் கேளாமல் அவர் குடும்பத்தினர் அவருக்குத் தனக்கோட்டி என்ற மங்கையை மணம்செய்து வைத்தனர். ஆனால், இராம

லிங்கர் துறவியாகித், தலயாத்திரை முடித்த பின்னர் நிலையாகத் தங்குதற்கு வடலூரைத் தேர்ந்தெடுத்தார். "ஆன்ம நேய ஒருமைப்பாடு" என்னும் கோட்பாட்டைக் கண்டு தெளிந்த வள்ளலார்,

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

என்னும் தூய மந்திர ஒலியை எழுப்பினார். "பசித்திரு," "தனித்திரு," "விழித்திரு" என்னும் மூன்று மந்திரங்களை யும் மற்றவர்களுக்குக் கற்றுத் தரத் தொடங்கினார்.

சமரச சன்மார்க்க சங்கத்தின்மூலமாகவும், சத்திய ஞானசபையின் வழியாகவும் ஒரு பெரிய சமயப்புரட்சியை இராமலிங்கர் நடத்தி வந்தார்.

நாத்திகத்தின் எதிரியாகவும், சீர் திருத்தச் செம்மலாகவும் வாழ்ந்த அடிகளார் தமிழுக்குச் செய்த தொண்டு மிகவும் பெரியது. தம்முடைய பொன்னான கருத்துகளை மக்கள் விரைந்து ஏற்காததைக் கண்ட அடிகளார், "கடை விரித்தேன் கொள்வாரில்லை" என்று மனம் நொந்து கூறினார். 1823 இல் தோன்றிய அடிகளார் 1874 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மூடப் பட்ட அறையிலிருந்து உடலோடு மறைந்துவிட்டாரென்று கூறுகின்றனர்.

21. சங்கம் நிறுவிய சான்றோர்



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழை வளர்க்க மூன்று சங்கங்கள் இருந்தன என்று வரலாறு கூறுகின்றது. இவற்றில் கடைச்சங்கம் மதுரையில் இருந்தது. இதே போன்று ஒரு சங்கத்தை 1901 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் நாள் மதுரையில் ஒருவர் தோற்றுவித்தார். அவர்தாம் புலவர்கள் போற்றிப் புகழ வாழ்ந்த பாலவநத்தம் சமீன்தாரான பாண்டித்துரைத் தேவர்.

பாண்டித்துரைத் தேவர் சிறந்த அரசியல் அறிஞரான பொன்னுச்சாமித் தேவரின் மைந்தர். முறைப்படி தமிழ் கற்ற பாண்டித்துரைத் தேவர் நிரம்பிய புலமை பெற்று விளங்கினார். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்,'' என்ற முறையில் தமிழ் இலக்கியத்தின் இன்பத்தை நுகர்ந்து, அதனை நாட்டுமக்கள் அறிய இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவாகும்.

நாட்டுமக்களிடம் மொழியின் மூலமாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த எண்ணிய தேவரவர்கள் ''செந்தமிழ்'' என்னும் மாத இதழ் ஒன்றை நடத்தினார்கள். கல்வியைப் பரப்பும் நோக்கத்தோடு ''சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை''யை அமைத்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாகத் தமிழ்விழா நடத்திப் பெரும் புலவர்களைப் போற்றினார்கள்.

நல்ல பேச்சாற்றல் பெற்றிருந்த தேவரவர்கள் பழைய இலக்கியங்களைப்பற்றிச் சொற்பொழிவு செய்தார்கள். பல செய்யுள் நூல்களை அச்சிட்டார்கள். பல நூல்களை வெளியிடுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். அவர்களே "சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை," போன்ற நூல்களை இயற்றினார்கள். புலவராகவும், புலவர்களைப் போற்றும் புரவலராகவும் திகழ்ந்தார்கள்.

தேவரவர்கள் உயர்ந்த நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள். *1901* ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற சென்னை மாநிலக் காங்கிரசு மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகத் தேவரவர்கள் இருந்தார்கள்.

இந்த மண்ணுலகில் நாற்பத்தைந்து ஆண்டுகளே வாழ்ந்த தேவரவர்கள் செய்த தமிழ்த்தொண்டால் இன்றும் நாம் நினைக்கத்தக்க பெருமையைப் பெற்றுவிட்டார்கள்.

---

22. அடிமைத்தளை ஒடித்த ஆபிரகாம் லிங்கன்



மனிதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த உரிமைப் போர் புரிந்த உத்தமர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அத்தகைய உத்தமர் களுக்கு உலகம் தந்த பரிசு குண்டுகள். உத்தமர்களின் இரத்தம்பட்டு உலக வரலாறு பலமுறை கறைபட்டதுண்டு. அவ்வாறு கறையடைந்த பொழுது களில் ஒன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் சுடப் பட்டது.

உழைக்கும் ஆற்றலும், உள்ளத்தில் உண்மையும், உயர்ந்த குறிக்கோளுமிருந்தால் மனிதன் தெய்வத்துள் வைக்கப்படும் நிலைக்கு உயர்ந்துவிடுவானென்பதற்கு ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

லிங்கன் 1809 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஒரு சிறிய உழவரின் மகனாகப் பிறந்தார். இளமை வாழ்க்கை நாட்டுப்புறத்திலேயே கழிந்தது. சின்ன வயதில் தாயார் இறந்துவிட்டார். அவருக்குக் கிடைத்த சிற்றன்னை அன்புள்ளம் கொண்டவர். லிங்கனுக்கும் அவர்தம் உடன் பிறந்தவளுக்கும் அவர் தாயாகவே இருந்தார்.

பள்ளியில் கிடைத்த கல்வியைத் தனியாகப் படித்தே வளர்த்துக் கொண்டவர் லிங்கன். எப்பொழுதும் எதை யாவது படிப்பார். பேசும்பொழுதெல்லாம் பெரியவர் களின் கருத்தை மேற்கோள் காட்டியே பேசுவார்.

பதினேழாம் வயதில் குறைந்த கூலியில் படகோட்டும் பணியை மேற்கொண்ட லிங்கன் பலவகையான வேலை களையும் செய்தார். ஓய்வு நேரத்தில் சட்டம் படித்தார். வழக்குரைஞர் தொழிலையும் மேற்கொண்டார்.

அரசியலில் நுழைந்த பொழுது முதல் தேர்தலில் லிங்கனுக்குத் தோல்வி கிடைத்தது. கலங்கவில்லை. பின் தொடர்ந்து வெற்றி கிடைத்தது.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவரான பிறகு அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாகத் தென் அமெரிக் கர்கள் உள்நாட்டுப் போரைத் தொடங்கினர். நாடு பிளவு படாமல் காக்கப் போராடினார் லிங்கன். இறுதியில் லிங்கனின் அரசுக்கு வெற்றி கிடைத்தது.

இரண்டாம் முறையாக 1865ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் நான்காம் நாள் லிங்கன் குடியரசுத் தலைவரானார். ஆனால் சுயநலக்கும்பலின் சூழ்ச்சியால் ஒரு மாதத்திற்குப்பின் சுடப் பட்டு 1865ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் நாள் உயிர் துறந்தார்.

மனிதர்களெல்லாம் சரிநிகர் சமானமாக வாழவேண்டு மென்று எண்ணிய லிங்கன் புகழ் என்றும் நிலைத்து வாழும்.

23. நாட்டுப் பணிபுரிந்த நல்லவர்



நூறாண்டுகள் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று நமது காலத்தில் வாழ்ந்துகாட்டிய பேரறிவாளர் டாக்டர் எம். விஸ்வேசுவரய்யா ஆவர். அரசாங்கப்பணியில் உள்ளவர்களும் நல்ல உள்ளமும், தொண்டாற்றும் மனப்பக்குவமும் பெற்றிருந்தால் செயற்கரிய செய்ய முடியும் என்பதற்கு டாக்டர் விஸ்வேசுவரய்யாவின் வாழ்க்கை சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

எளிய குடும்பத்தில் பிறந்த அவர் "கருமமே கண்ணாக" இருந்ததால் எடுத்துக்கொண்ட பணிகளை எல்லாம் ஈடற்ற முறையில் செய்து முடித்து ஒப்பற்ற புகழ்பெற்றார்.

அவர் வாழ்க்கை பம்பாய் மாநிலத்தில் பொறியியலாளராகத் தொடங்கியது. இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தியாவின் மேற்குப்பகுதியில் விஸ்வேசுவரய்யா அரும்பணி செய்தார். பல பொறிகளை அமைக்கத் திட்டம் தீட்டிக் கொடுத்தார். தாமே திறந்து மூடுகின்ற கதவுகளைப் போன்ற பல சாதனங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். பூனா குடிதண்ணீர்த் திட்டம் அவரது திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

நலத் துறையிலும், நீர்ப்பாசனத்துறையிலும் அவர் சிறப்பாகக் கவனம் செலுத்திப் பல புதுமைகளைச்

செய்தார். தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர அவர்தம் நீர்ப்பாசனத் திட்டங்கள் வழிவகுத்தன. மேலை நாட்டினரும் கண்டு வியக்கின்ற அறிவாற்றல் பெற்றிருந்த அவர் உலகத்தைச் சுற்றி வந்தார்.

தமது நாற்பத்தொன்றும் வயதில் தமது சொந்த மாநிலமான மைசூரிலேயே தலைமைப் பொறியியலாளராகப் பணியேற்றார்.

1912ஆம் ஆண்டில் மைசூரின் திவானானார். தமது கனவுகளை எல்லாம் நனவாக்க முயன்றார். மைசூர்ப் பல்கலைக்கழகத்தை அமைத்தார். நகரமன்றங்களை மாற்றி அமைத்தார். வங்கிகள் அமையவும் தொழில்கள் தோன்றவும் வழி வகுத்தார்.

கிராம வளர்ச்சிப் பணியிலும் அக்கறை காட்டினார். கிராமப் புறங்களில் கல்வி பெருகி உற்பத்தித்திறன் வளர ஆவன செய்தார்.

1919ஆம் ஆண்டில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் கூடப் பின்னரும் நாற்பதாண்டுகளுக்குமேல் நாட்டின் நலம் கருதி ஓயாமல் உழைத்தார். பல நூல்கள் எழுதியுள்ளார்.

அவர்தம் வாழ்க்கை வியந்து பாராட்டிப் பின்பற்றத் தக்கது.

24. சிந்தனையில் சிறந்த அம்மையார்



வாழ்நாளெல்லாம் சுதந்திரமான சிந்தனையோடு பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பிறந்த நாட்டை விட்டு வந்து நமது நாட்டை அடைந்து, இங்கு மக்களின் மனத்தில் சுதந்திர வேட்கையை வளர்த்த ஓர் அம்மையார் உண்டு. அவர்தாம் **டாக்டர் அன்னி பெசண்ட்.**

அன்னிபெசன்ட் அம்மையாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அன்னி உட். இவர் 1847ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் நாளில் இலண்டனில் பிறந்தார். இளமையில் வீட்டில் பணத்தொல்லை இருந்த போதிலும் ஓரளவு சிறந்த முறையில் கல்வி கற்றார்.

அன்னிபெசன்ட்டுக்குக் குடும்ப வாழ்க்கை செவ்வனே அமையவில்லை. காதலிப்பதாக எண்ணிக்கொண்டு தமது இருபதாம் வயதில் பிராங்க் பெசன்ட் என்ற கிறித்தவ சமய உபதேசியார் ஒருவரை மணந்தார். ஆனால் கருத்து வேறுபாட்டின் காரணமாக குடும்ப வாழ்க்கை சிக்கல்கள் நிறைந்தனவா யிருந்தன. ஆறு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தார். இரண்டு குழந்தைகள் பிறந்தன. பிறகு கணவரைப் பிரிந்து தம் சுதந்திரமான பொது வாழ்க்கையை 1873இல் மேற்கொண்டார்.

தொடர்ந்து வந்த தொல்லைகளின் காரணமாக நாத்திகக் கொள்கையைப் பின்பற்றினார். சுதந்திர சிந்தனைச்

சங்கத்தில் சேர்ந்து தொண்டு செய்தார். இந்தக் காலத்தில் இவரை இவருடைய போக்கிற்காகப் பலர் தூற்றினர். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஆதரித்து நூல் எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டார். சோஷலிசக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு தொழிலாளர் இயக்கங்களை நடத்தினர்.

பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்த அன்னி பெசன்ட் 1893 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்தார். நமது நாட்டு மக்களிடம் சுயமரியாதையை வளர்த்து, அவர்களைச் சுதந்திரத்திற்காகப் பாடுபடச் செய்தார். சுய ஆட்சி இயக்கத்தை 1914ஆம் ஆண்டில் தொடங்கினர். வார, நாள் இதழ்களை நடத்திக் கருத்துப் பிரசாரம் செய்தார். முகமது அலி ஜின்னு, பண்டித மோதிலால் நேரு போன்ற பெருந் தலைவர்கள் அவரோடு இணைந்து நாட்டுத்தொண்டு புரிந்தனர். 1917 ஆம் ஆண்டில் அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவரானர். ஆனல் அவர் கொண்ட சில கொள்கைகளின் காரணமாகவும், காந்தியடிகளோடு கருத்து வேறுபாடு கொண்டதாலும், அரசியல் வாழ்வில் அவருக்கு இருந்த செல்வாக்குக் குறைந்தது.

டாக்டர் அன்னிபெசன்ட் வாழ்க்கையில் வெற்றிகளும் தோல்விகளும் கலந்திருந்தன. அவர் சிறந்த சிந்தனையாளர். ஆற்றல் மிக்க தலைவர். கேட்டார்ப் பிணிக்கும் வண்ணம் பேசும் நாவன்மை கொண்டவர். நமது நாட்டின் விடுதலைக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அவர் செய்த சேவை மகத்தான ஒன்றாகும்.

———

தலைமை நிலையம்:
79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள்:

திருநெல்வேலி-6

மதுரை-1 கோயமுத்தூர்-1

கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

அப்பர் அச்சகம், சென்னை-1.